## இராசிபுரம் நகராட்சி

## நகர்மன்ற சாதாரணக் கூட்ட அறிவிப்பு

2024—ஆம் வருடம் அக்டோபர் மாதம் 23—ஆம் தேதி புதன் கிழமை முற்பகல் 10.30 மணியளவில் இராசிபுரம் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் ஒன்று நகர் மன்ற கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

அதுசமயம் கீழ்க்கண்டப் பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இராசிபுரம் நகராட்சி
நாள் : 16.10.2024

தலைவர்,
நகர் மன்றம்.

## பொருள்கள்

(1) இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணியில் ஈடுபட்டு வரும் S.R. எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் பணிக்காலம் 01.09.2024 முதல் 30.04.2025 வரை நீட்டிப்பு செய்ய மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(3899/22/எச்1)

**தீர்மானம் எண். 607**

S.R. எண்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு பணி மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது.

(2) இந்நகராட்சியில் சேகரமாகும் பயனற்ற துணிகள் மற்றும் பாலிதீன் பைகளை பேலிங் செய்யும் இயந்திரம் பழுதானதை சரிசெய்யவும், இதற்கான உத்தேச செலவினம் ரூ. 2.5/— லட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(2333/24/எச்1)

**தீர்மானம் எண். 608**

அனுமதிக்கப்படுகிறது.

(3) இந்நகராட்சி எருக்கிடங்கில் கொட்டப்படும் சாக்கடைக் கழிவுகளை நிரவுவதற்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1) அம்மன் எர்த் மூவர்ஸ் — ரூ. 1200/— (1 மணிக்கு)
2) ராஜா எர்த் மூவர்ஸ் — ரூ. 1250/— (1 மணிக்கு)

**அலுவலகக்குறிப்பு :**

குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள அம்மன் எர்த் மூவர்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

(1668/24/எச்1)

**தீர்மானம் எண். 609**

அம்மன் எர்த் மூவர்ஸ் நிறுவனத்திற்கு / நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ஏற்க்கப்பட்டது.

**(4)** பொது சுகாதாரப் பிரிவில் கிருமிநாசினிகள் வாங்க ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | | காளியம்மன் டிரேடர்ஸ் | அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ் |
|---|---|---|---|---|
| 1) | நீர்த்த சுண்ணாம்புத் தூள் | 1 கி.கி. | 9.45 | 10.00 |
| 2) | பிளிச்சிங் பவுடர் | 1 கி.கி. | 47.20 | 48.00 |
| 3) | பினாயில் | 1 லிட்டர் | 74.34 | 78.00 |
| 4) | ஆசிட் (கழிப்பிடம் சுத்தம் செய்ய) | 1 லிட்டர் | 57.82 | 60.00 |

**அலுவலகக்குறிப்பு :**

குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள காளியம்மன் டிரேடர்ஸ் கார்ப்பரேசன் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

(1667/24/எச்1)

**தீர்மானம் எண். 610**

காளியம்மன் டிரேடர்ஸ் கார்ப்பரேசன் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ஏற்க்கப்பட்டது.

**(5)** இந்நகராட்சியின் நுண்ணுரம் தயாரிக்கும் மையத்தில் மக்கும் கழிவுகளை துகளாக்கும் இயந்திரத்தின் பெல்ட் அருந்துள்ளதை மாற்றவும் இதற்கான உத்தேச செலவினம் ரூ. 60000/—க்கு (ரூபாய் அறுபதாயிரம்) மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(2374/24/எச்1)

**தீர்மானம் எண். 611**

அனுமதிக்கப்பட்டது.

**(6)** இராசிபுரம் நகராட்சிக்கு திரு பாஸ்கர், த/பெ. திரு ராமசாமி ரெட்டியார், கதவு எண் 50, R.R.பேர்லேண்ட்ஸ், கொண்டலாம்பட்டி, சேலம் அவர்கள் இராசிபுரம் வட்டம், அணைப்பாளையம் கிராமத்தில் உள்ள பாஸ்கர் என்பவருக்கு சொந்தமான புல எண்.116, 117, 118, 41—இல் உள்ள 7.03 ஏக்கர் நிலத்தினை இராசிபுரம் நகராட்சி ஆணையாளர் பெயருக்கு 05.07.2024 தேதியன்று தானமாக வழங்கியுள்ளார் (ஆவண எண். 4221/2024) தற்போது மேற்கண்ட இடம் ஆணையாளர் பெயருக்கு தானமாக பெறப்பட்டதனை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் பதிவு செய்யலாம்

(1890/24/இ1)

**தீர்மானம் எண். 612**

பதிவு செய்யப்பட்டது.

(7) இராசிபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்டப் பகுதிகளில் கட்டிட அனுமதி கோரி பெறப்படும் விண்ணப்பங்களுக்கு கட்டிட உரிமையாளரின் சுயசான்றின் (Self Certification) அடிப்படையில் 2500 சதுரடி வரை பரப்பளவுள்ள மனையில், 3500 சதுரடி பரப்பளவு வரையிலான 2 குடியிருப்புகளுக்கு (2 Dwelling units) தரைத்தளம் அல்லது தரைத்தளத்துடன்கூடிய முதல் தளம் குடியிருப்பு கட்டிடங்கள் கட்ட இணையவழி (Single Window Portal) கட்டட அனுமதி வழங்குவதற்கு செலுத்த வேண்டிய ஒருங்கிணைந்த கட்டணங்களை நிர்ணயம் செய்து வரப்பெற்ற அரசாணை (நிலை) எண். 94, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை நாள் 18.07.2024 மன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும்.

**சுருக்கம்**

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் – 2500 சதுர அடி வரை பரப்பளவுள்ள மனையில் 3500 சதுர அடி வரையிலான தரைத்தளம் (அ) தரைத்தளத்துடன் கூடிய முதல் தளம் குடியிருப்புக் கட்டடங்கள் கட்ட சுயசான்றின் அடிப்படையில் இணையவழி (Single Window Portal) கட்டட அனுமதி வழங்குவதற்கு செலுத்த வேண்டிய ஒருங்கிணைந்த கட்டணங்களை நிர்ணயம் செய்தல் – ஆணைகள் – வெளியிடப் படுகின்றன.

---

**நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை**

அரசாணை (நிலை) எண். 94

நாள் : 18.07.2024
குரோதி, ஆடி–02,
திருவள்ளுவராண்டு 2055

படிக்கப்பட்டது:–

1. பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரின் கடிதம் T.P.D.C.No. A5/0916/2024, நாள் : 15.07.2024
2. நகராட்சி நிருவாக இயக்குனரின் கடிதம் ந.க. எண். 31917/2019/டிபி2, நாள் : 16.07.2024
3. பேரூராட்சிகளின் இயக்குனரின் கடிதம் ந.க. எண். 5503/2023/இ1, நாள் : 16.07.2024

******

<u>ஆணை</u> :

2024–2025 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை கூட்டத்தொடரின் போது, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் நிதிநிலை அறிக்கையில் பத்தி எண்.157–ல் கீழ்கண்டவாறு சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது:–

> *"A new module integrated in the single window system will be introduced to facilitate sanction of building permissions based on self-certification, without requirement of completion certificate. Plot sizes up to 2500 sq.ft., and built-up area up to 3500 sq.ft., for the construction of residential structures having ground or ground plus one floor will be eligible for instant registration without the requirements of building permission."*

...2/-

2. மேற்காணும் அறிவிப்பிற்கு செயல்வடிவம் கொடுக்க ஏதுவாக, அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில், 2500 சதுர அடி வரை பரப்பளவுள்ள மனையில் 3500 சதுர அடி வரையிலான தரைத்தளம் (அ) தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய குடியிருப்புக் கட்டடங்கள் கட்டுமானத்திற்கு சுய சான்றின் அடிப்படையில் (Self–Certification) ஒற்றைச் சாளர முறையில் (Single Window Portal) இணைய வழி (on–line) வாயிலாக கட்டட அனுமதி வழங்குவதற்கு, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு செலுத்த வேண்டிய ஒருங்கிணைப்புக் கட்டண விவரங்கள் குறித்து, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர், நகராட்சி நிருவாக இயக்குநர் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் ஆகியோர்களிடமிருந்து கருத்துருக்கள் பெறப்பட்டது.

3. பார்வை 1–ல் படிக்கப்பட்ட கடிதத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர், சுய சான்றின் அடிப்படையில் ஒற்றைச் சாளர முகப்பின் மூலம் இணைய வழி கட்டட அனுமதி ஒப்புதலுக்கு, ஒரு சதுர மீட்டர் குடியிருப்பு கட்டுமான பரப்பிற்கு ரூபாய் 1076/– (ஒரு சதுர அடிக்கு ரூபாய் 100/–) என ஒருங்கிணைந்த கட்டணமாக (Consolidated Fee) நிர்ணயம் செய்யலாம் எனத் தெரிவித்துள்ளார்.

4. பார்வை 2–ல் படிக்கப்பட்ட கடிதத்தில் நகராட்சி நிருவாக இயக்குநர், அனைத்து மாநகராட்சிகளையும் 5 நிலையாகவும் மற்றும் நகராட்சிகளை 4 நிலைகளாகவும் வகைப்படுத்தி, ஒவ்வொரு நிலைக்கும், (இணைப்பு IIல் உள்ளவாறு) ஒரே மாதிரியான கட்டணம் (Flat Rate) கீழ்கண்ட பட்டியல்களில் குறிப்பிட்டுள்ளவாறு நிர்ணயம் செய்யலாம் என பரிந்துரைத்துள்ளார்:–

| மாநகராட்சிகள் – குடியிருப்பு கட்டுமானம் – கட்டண விவரம் | | | | |
|---|---|---|---|---|
| 325 ச.மீ.வரை (3500 ச.அடி வரை) | | | ஒருங்கிணைந்த கட்டணம் | |
| வ. எண். | மாநகராட்சியின் நிலை | எண்ணிக்கை | ரூ/ச.மீ. | ரூ./சதுர அடி |
| 1 | சிறப்புநிலை A மாநகராட்சிகள் | 3 | 950 | 88 |
| 2 | சிறப்புநிலை B மாநகராட்சிகள் | 3 | 900 | 84 |
| 3 | தேர்வுநிலை மாநகராட்சிகள் | 5 | 850 | 79 |
| 4 | நிலை–I மாநகராட்சிகள் | 3 | 800 | 74 |
| 5 | நிலை–II மாநகராட்சிகள் | 6 | 800 | 74 |
| | கூடுதல் | 20 | | |

...3/-

| நகராட்சிகள் – குடியிருப்பு கட்டுமானம் – கட்டண விவரம் | | | | |
|---|---|---|---|---|
| 325 ச.மீ.வரை (3500 ச.அடி வரை) | | | ஒருங்கிணைந்த கட்டணம் | |
| வ. எண் | நகராட்சியின் நிலை | எண்ணிக்கை | ரூ/ச.மீ. | ரூ/சதுர அடி |
| 1 | சிறப்புநிலை நகராட்சிகள் | 16 | 800 | 74 |
| 2 | தேர்வுநிலை நகராட்சிகள் | 29 | 800 | 74 |
| 3 | நிலை–I நகராட்சிகள் | 31 | 750 | 70 |
| 4 | நிலை–II நகராட்சிகள் | 62 | 750 | 70 |
| | கூடுதல் | 138 | | |

5. பார்வை 3–ல் படிக்கப்பட்ட கடிதத்தில் பேரூராட்சிகளின் இயக்குநர் ஏற்கனவே நான்கு நிலைகளில் வகைப்படுத்தப்பட்ட பேரூராட்சிகளுக்கு (இணைப்பு IIIல் உள்ளவாறு) ஒரே கட்டணம் (Flat Rate) என்ற வகையில் கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளார்:–

| பேரூராட்சிகள் – குடியிருப்பு கட்டுமானம் – கட்டண விவரம் | | | | |
|---|---|---|---|---|
| 325 ச.மீ. வரை (3500 ச.அடி வரை) | | | ஒருங்கிணைந்த கட்டணம் | |
| வ. எண் | பேரூராட்சியின் நிலை | எண்ணிக்கை | ரூ/ச.மீ. | ரூ/சதுர அடி |
| 1 | சிறப்புநிலை பேரூராட்சிகள் | 62 | 750 | 70 |
| 2 | தேர்வுநிலை பேரூராட்சிகள் | 179 | 700 | 65 |
| 3 | நிலை – I பேரூராட்சிகள் | 190 | 590 | 55 |
| 4 | நிலை – II பேரூராட்சிகள் | 59 | 485 | 45 |
| | மொத்தம் | 490 | | |

6. மேலும், ஒற்றைச் சாளர இணைய முகப்பின் மூலம் சுயசான்றின் அடிப்படையில் கட்டட உரிமம் வழங்கும்போது கீழ்காணும் நடைமுறைகளைப் பின்பற்ற உரிய ஆணை வழங்குமாறு நகராட்சி நிருவாக இயக்குநர் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர், அரசைக் கோரியுள்ளனர்:–

i. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, சட்டப்பிரிவு 198, உட்பிரிவு (2) (xviii)–ல் அரசுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் மேற்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு கட்டணங்களை நிர்ணயம் செய்யலாம்.

ii. இச்சட்டப்பிரிவு 199 மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் விதிகள், 2023-ல் விதி 394-ன்படி நகர்ப்புற உள்ளாட்சி மன்றம் கட்டணம் நிர்ணயம் செய்வதிலிருந்து தளர்வு செய்யலாம்.

iii. அரசாணை (நிலை) எண்.18, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் : 04.02.2019ல் வெளியிடப்பட்ட தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டட விதிகள், 2019ல் நிர்ணயிக்கப்பட்ட சில கட்டணங்களை (Scrutiny Fee, Display Board Fee) வசூலிப்பதிலிருந்து விலக்களிக்கலாம்.

iv. ஒற்றைச் சாளர இணைய முகப்பின் (Single Window Portal) மூலம் கட்டட உரிமம் வழங்க மேற்குறிப்பிட்ட அட்டவணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு கட்டணங்களை வகைப்படுத்தி உள்ளீடு செய்யலாம்.

v. சுய சான்று (Self-Certification) மூலம் கட்டட உரிமம் ஒற்றைச் சாளர இணைய முகப்பின் (Single Window Portal) வழியாக பெற்றபின் காலிமனை வரி மற்றும் பாதாள சாக்கடை கட்டணம் செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கலாம்.

vi. சுய சான்று (Self-Certification) மூலம் கட்டட உரிமம் பெற்றபின், கண்டறியப்படும் விதிமீறல்கள் மீது, தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டட விதிகள், 2019-ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நிபந்தனை விதிக்கலாம்.

vii. இணைப்பில் உள்ளவாறு அனைத்து நிலைகளில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த கட்டண விகிதங்களில் ஏதேனும் மாறுதல் செய்ய வேண்டி இருப்பின் தொடர்புடைய துறைத் தலைவர் அவர்களின் ஒப்புதலுடன் மாறுதல் செய்திடலாம்.

viii. குடியிருப்பு கட்டுமானம் 325 சதுர மீட்டருக்கு (3500 சதுர அடி) மேல் உள்ள இனங்களுக்கு அந்தந்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில், தற்போது வசூலிக்கப்படும் கட்டண விகிதங்களை தொடர்ந்து வசூலிக்கலாம். மேற்கண்ட கட்டண விகிதங்கள் 325 சதுர மீட்டர் வரை உள்ள புதிய குடியிருப்பு கட்டுமானங்களுக்கு மட்டும் நிர்ணயம் செய்யப் படுகிறது.

7. கூடுதல் தலைமை செயலாளர்/ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சி நிருவாக இயக்குநர் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் ஆகியோரின் மேற்காணும் கருத்துருக்களை அரசு கவனமாகப் பரிசீலனை செய்தது. பரிசீலனைக்குப் பின், மேலே பத்தி 6-ல் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகளுக்குட்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998,

சட்டப்பிரிவு 198, உட்பிரிவு (2) (xviii)–ல் அரசுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில், இணைப்பு I, II மற்றும் III–ல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிலைகளில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் 2500 சதுர அடி வரை பரப்பளவுள்ள மனையில் 3500 சதுர அடி வரையிலான குடியிருப்பு கட்டுமானத்திற்கு (தரைத்தளம் (அ) தரைத்தளத்துடன் கூடிய முதல் தளம்) சுய சான்றின் (Self–Certification) அடிப்படையில் ஒற்றைச்சாளர முறையில் (Single Window Portal) இணைய வழி கட்டட அனுமதி (Online Building Approval) பெறுவதற்கு செலுத்த வேண்டிய ஒருங்கிணைந்த கட்டணங்களைக் கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்து அரசு ஆணையிடுகிறது.

| 1. பெருநகர சென்னை மாநகராட்சி<br>325 ச.மீ. வரை (3500 ச.அடி வரை) குடியிருப்புக் கட்டுமான அனுமதிக்கு ஒருங்கிணைந்த கட்டணம் | |
|---|---|
| ரூ 1076/– ஒரு சதுர மீட்டருக்கு | ரூ 100/–<br>ஒரு சதுர அடிக்கு |

| 2. மாநகராட்சிகள் – குடியிருப்புக் கட்டுமானம் – கட்டண விவரம் | | | | |
|---|---|---|---|---|
| 325 ச.மீ. வரை (3500 ச.அடி வரை) | | | ஒருங்கிணைந்த கட்டணம் | |
| வ. எண். | மாநகராட்சியின் நிலை | எண்ணிக்கை | ரூ/ ச.மீ. | ரூ/சதுர அடி |
| 1 | சிறப்புநிலை A மாநகராட்சிகள் | 3 | 950 | 88 |
| 2 | சிறப்புநிலை B மாநகராட்சிகள் | 3 | 900 | 84 |
| 3 | தேர்வுநிலை மாநகராட்சிகள் | 5 | 850 | 79 |
| 4 | நிலை–I மாநகராட்சிகள் | 3 | 800 | 74 |
| 5 | நிலை–II மாநகராட்சிகள் | 6 | 800 | 74 |
| | கூடுதல் | 20 | | |

| 3. நகராட்சிகள் – குடியிருப்புக் கட்டுமானம் – கட்டண விவரம் | | | | |
|---|---|---|---|---|
| 325 ச.மீ. வரை (3500 ச.அடி வரை) | | | ஒருங்கிணைந்த கட்டணம் | |
| வ. எண் | நகராட்சியின் நிலை | எண்ணிக்கை | ரூ/ ச.மீ. | ரூ/சதுர அடி |
| 1 | சிறப்புநிலை நகராட்சிகள் | 16 | 800 | 74 |
| 2 | தேர்வுநிலை நகராட்சிகள் | 29 | 800 | 74 |
| 3 | நிலை–I நகராட்சிகள் | 31 | 750 | 70 |
| 4 | நிலை–II நகராட்சிகள் | 62 | 750 | 70 |
| | கூடுதல் | 138 | | |

...6/-

| 4. பேரூராட்சிகள் – குடியிருப்புக் கட்டுமானம் – கட்டண விவரம் | | | | |
|---|---|---|---|---|
| 325 ச.மீ.வரை (3500 ச.அடி வரை) | | | ஒருங்கிணைந்த கட்டணம் | |
| வ. எண் | பேரூராட்சியின் நிலை | எண்ணிக்கை | ரூ/ ச.மீ. | ரூ /சதுர அடி |
| 1 | சிறப்புநிலை பேரூராட்சிகள் | 62 | 750 | 70 |
| 2 | தேர்வுநிலை பேரூராட்சிகள் | 179 | 700 | 65 |
| 3 | நிலை – I பேரூராட்சிகள் | 190 | 590 | 55 |
| 4 | நிலை – II பேரூராட்சிகள் | 59 | 485 | 45 |
| | மொத்தம் | 490 | | |

8. மேற்காணும் நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்கள் சுய சான்று மூலம் கட்டட உரிமம் பெறும் திட்டத்திற்கு மட்டுமே பொருந்தும்.

9. மேற்காணும் வழிகாட்டுதல்களை அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களின் பதிவிற்கு வைத்து செயல்படுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறது.

10. நிறைவுச் சான்றிதழ் தேவையின்றி, சுயசான்றிதழ் அடிப்படையில் கட்டட அனுமதிகளை வழங்க ஏதுவாக ஒற்றைச்சாளர முறையில் ஒருங்கிணைக்கப்பட்ட புதிய தொகுதியில் 2500 சதுர அடி வரை பரப்பளவுள்ள மனையில் 3500 சதுர அடி வரையிலான தரை தளம் (அ) தரை தளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய குடியிருப்புக் கட்டடங்கள் கட்டுமானத்திற்கு சுயச்சான்றின் அடிப்படையில் (Self-Certification) ஒற்றைச் சாளர முறையில் இணைய வழியில் கட்டட அனுமதி பெறுவதற்கு மேற்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களை உள்ளீடு செய்வதற்கு நகர் ஊரமைப்பு இயக்குநருடன் கலந்தாலோசித்து மேல்நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்படுகிறது.

// (ஆளுநரின் ஆணைப்படி) //

தா. கார்த்திகேயன்
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்:</u>

ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை-600003.
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை-600028.
நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை-600028.
நகர் ஊரமைப்பு இயக்குநர், கோயம்பேடு, சென்னை-600107.
உறுப்பினர்-செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம்,
கோயம்பேடு, சென்னை-600107.

...7/-

| DETAILS OF MUNICIPALITIES | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| III. Grade-I Municipalities | | Consolidated Fee | | | | |
| Sl. No | Name of the Municipality | Rs. Per Sq.m | | | | Rs. Per Sq.ft |
| | | Building License Fee | D.C | LWF | Total | |
| **Chengalpattu Region** | | **519** | **10** | **221** | **750** | **70** |
| 1 | Chengalpattu | | | | | |
| 2 | Panruti | | | | | |
| 3 | Virudhachalam | | | | | |
| 4 | Thiruthani | | | | | |
| 5 | Nandhivaram-Guduvanchery | | | | | |
| **Vellore Region** | | | | | | |
| 6 | Arakkonam | | | | | |
| 7 | Arani | | | | | |
| 8 | Arcot | | | | | |
| 9 | Gudiyatham | | | | | |
| **Salem Region** | | | | | | |
| 10 | Edappadi | | | | | |
| 11 | Komarapalayam | | | | | |
| 12 | Rasipuram | | | | | |
| **Tiruppur Region** | | | | | | |
| 13 | Palladam | | | | | |
| 14 | Sathyamangalam | | | | | |
| 15 | Kangeyam | | | | | |
| 16 | Thirumuruganpoondi | | | | | |
| **Thanjavur Region** | | | | | | |
| 17 | Aranthangi | | | | | |
| 18 | Manapparai | | | | | |
| 19 | Vedaranyam | | | | | |
| 20 | Jeyankondam | | | | | |

– 14 –

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Madurai Region** | | | | | | |
| 21 | Cumbum | 519 | 10 | 221 | 750 | 70 |
| 22 | Devakottai | | | | | |
| 23 | Paramakudi | | | | | |
| 24 | Sivagangai | | | | | |
| 25 | Thirumangalam | | | | | |
| 26 | Rameshwaram | | | | | |
| **Tirunelveli Region** | | | | | | |
| 27 | Aruppukottai | | | | | |
| 28 | Colachel | | | | | |
| 29 | Kadayanallur | | | | | |
| 30 | Sankarankoil | | | | | |
| 31 | Srivilliputhur | | | | | |

---

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

மன்றம் பதிவு செய்யலாம்.

**(477/19/எப்1)**

**தீர்மானம் எண். 613**

பதிவு செய்யப்பட்டது.

**(8)** இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான பழைய பேருந்து நிலையத்தில் கடைகள் கட்டப்பட்டு 50 ஆண்டுகளுக்கு மேலுள்ளதால் கட்டிடங்கள் மிகவும் பழுதடைந்துள்ளது. எனவே, புதிய வளாகம் கட்டிடம் கட்ட அரசு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கடைக்காரர்களுக்கு கடைகளை காலிசெய்ய **13.09.2020**–ஆம் தேதி அறிவிப்பு நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளது. கடைகளின் விவரம் பின்வருமாறு.

| கடை எண் | பெயர் | கடை எண் | பெயர் |
|---|---|---|---|
| 23 | திரு பன்னீர்செல்வம் | 31 | திரு சீனிவாசன் |
| 28 | திரு எஸ்.ஆர். சீனிவாசன் | 32 | திரு முருகன் |
| 29 | திரு ஆர். ரவிச்சந்திரன் | 33 | திரு மு. மாதேஸ்வரன் |
| 25 | திரு இராஜாராம் | 6 | திரு இராஜாராம் |

மேற்கண்டவர்கள் நகராட்சி வசம் சாவியை ஒப்படைத்துள்ளார்கள். மேலும் கடையின் வாடகை நிலுவையை முன்வைப்புத் தொகையிலிருந்து ஈடு செய்து கொள்ளவும் குத்தகை உரிமத்தை ரத்து செய்யவும், மீதமுள்ள வைப்புத் தொகையினை திருப்பிக் கொடுக்கவும் நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

மேற்படி கடையின் குத்தகை உரிமத்தை **01.10.2024** முதல் ரத்து செய்ய மன்ற அனுமதி வழங்கலாம்.

**(4261/23/அ2)**

**தீர்மானம் எண். 614**

ரத்து செய்யவும், முன்வைப்புத் தொகையிலிருந்து ஈடுசெய்ய அனுமதிக்கப்பட்டது.

**(9)**

| | | |
|---|---|---|
| பார்வை | **:** | 1) நகர் மன்றத் தலைவர், இராசிபுரம் நகராட்சி அவர்களின் கடித நாள் **15.06.2024.** |

| | | |
|---|---|---|
| | | 2) இராசிபுரம் தாலுாக்கா பஸ் உரிமையாளர்கள் சங்க கடித நாள் 22.06.2024.<br>3) உழவர் சந்தை விவசாயிகளின் கடித நாள் 24.06.2024.<br>4) கிளை மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம் இராசிபுரம் கடிதம் 24.06.2024. |

பார்வையில் காணும் கடிதங்கள் 1, 2, 3 மற்றும் 4–இல் புதிய பேருந்து நிலையத்தில் காய்கறி கடை வைப்பதை தடை செய்யக் கோரி கடிதங்கள் வரப்பெற்றுள்ளன. புதிய பேருந்து நிலையத்தில் (அனைத்து தள்ளுவண்டி கடைகளும்) தள்ளுவண்டியில் காய்கறி கடை வைத்துள்ள போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளதால் அவற்றை அப்புறப்படுத்த வேண்டுமெனவும், நகராட்சிக்குச் சொந்தமான கடைகளில் காய்கறி கடையை அப்புறப்படுத்தவும், மேலும் கடையின் முன்னாள் காய்கறி கடை வைத்துள்ளவர்கள் அந்த கடைக்காரர்களே காய்கறி கடைகளை அகற்றப்பட வேண்டுமெனவும், தவறும்பட்சத்தில் கடையின் உரிமையை ரத்து செய்து மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கொண்டு வரப்படும் என மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :</u>

மன்றம் அனுமதிக்கலாம். (5298/23/அ2)

**தீர்மானம் எண். 615**

நடைபாதை மற்றும் தள்ளுவண்டி வியாபாரிகள் நகராட்சிக் கடைகள் முன்புறம் காய்கறி வியாபாரிகள் கடைகளை தினசரி சந்தை வளாகத்தில் வியாபாரம் செய்ய முன்வர வேண்டும். அனுமதிக்கப்பட்டது.

(10) இராசிபுரம் நகராட்சி 22.05.1998-இல் முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு ,27 வார்டுகளாக ,8.158 சதுர மீட்டர் பரப்பளவில் ,2011-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 50244 மக்கள் தொகை உள்ளடக்கி தற்போது செயல்பட்டு வருகிறது. தற்போது உத்தேச மக்கள் தொகை 69000 ஆகும் .தற்போது இந்நகராட்சியை ஒட்டினாற்போல் அமைந்துள்ள கிராம ஊராட்சிகள் தேசிய நெடுஞ்சாலை, நான்கு வழி சாலையை ஒட்டி அமைந்துள்ளதால், நன்கு வளர்ச்சியடைந்து வருவதாலும் மற்றும் அணைப்பாளையம் பகுதியில் இந்த நகராட்சி புதிய பேருந்து நிலையம் அமைக்க இருப்பதால் கீழ்கண்ட கிராம ஊராட்சிகளை

1. அணைப்பாளையம்
2. சந்திரசேகரபுரம்
3. கவுண்டம்பாளையம்
4. முத்துக்காளிப்பட்டி
5. கோனேரிப்பட்டி
6. முருங்கப்பட்டி

இந்நகராட்சியுடன் இணைத்தால், இந்நகரம் வளர்ச்சி அடையும். மேலும் இராசிபுரம் நகரில் பட்டு சேலை விற்பனை முனையமாக செயல்படுவதாலும்உற்பத்தி செய்யும் மையமாக இருப்பதாலும் நெய் , மற்றும் முக்கிய சுற்றுலாத்தலமாக கொல்லிமலைக்கு செல்லும் முக்கிய நகரமாக இந்நகராட்சி இந்நகரில் .பிற்காலத்தில் இது ஒரு மாநகராட்சியாக தரம் உயரக்கூடிய சூழ்நிலையும் உள்ளது .உள்ளது வியாபாரத்தைமுன்னிட்டு சுமார் 15000 பேர் இந்நகராட்சிக்கு வந்து செல்கின்றனர்.

இந்நகராட்சி முதல் நிலை நகராட்சியாக கொண்டு ஆண்டு வருமானம் 1269.78 இலட்சம் உள்ளது.

கீழ்கண்ட கிராம ஊராட்சிகளை இராசிபுரம் முதல் நிலை நகராட்சியுடன் இணைப்பதன் மூலமாக இராசிபுரம் தேர்வு நிலையாக தரம் உயர்த்த வழிவகை உள்ளது.

| வ. எண் | கிராம ஊராட்சி பெயர் | மக்கள் தொகை | பரப்பளவு (ச. கி. மீ) |
|---|---|---|---|
| 1. | அணைப்பாளையம் | 1200 | 3.415 |
| 2. | சந்திரசேகரபுரம் | 4000 | 1.676 |
| 3. | கவுண்டம்பாளையம் | 2500 | 6.350 |
| 4. | முத்துக்காளிப்பட்டி | 4500 | 5.009 |
| 5. | கோனேரிப்பட்டி | 2500 | 2.061 |
| 6. | முருங்கப்பட்டி | 1200 | 2.319 |
| **மொத்தம்** | | **15900** | **20.830** |

மேற்கண்ட கிராம ஊராட்சிகளை இராசிபுரம் முதல் நிலை நகராட்சியுடன் இணைப்பதால் மக்களுக்கு அதிக பயனுள்ள பெரு நகரமாக மேம்பாடு அடையும்.

| வ. எண் | கிராம ஊராட்சி பெயர் | மக்கள் தொகை 2011 | பரப்பளவு (ச. கி. மீ.) |
|---|---|---|---|
| 1. | இராசிபுரம் நகராட்சி | 50244 | 8.158 |
| 2. | 6 கிராம ஊராட்சிகள் | 15900 | 20.830 |
| **மொத்தம்** | | **66144** | **28.988** |

மேற்கண்டவாறு இராசிபுரம் முதல் நிலை நகராட்சியின் எல்லையை விரிவாக்கம் செய்து தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டால் அரசு மானியங்கள் அதிக அளவில் ஒதுக்கீடு செய்ய வாய்ப்பு உள்ளதுஇந்நகராட்சியுடன் மேற்கண்ட கிராம ஊராட்சிகளை இணைப்பதால் . பொதுமக்களுக்கு தேவைய ான அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டுஅப்பகுதி பொது மக்கள் , .வாழ்வாதாரம் மேம்படும்

இதன் அடிப்படையில் மேற்கண்ட யுடன் கிராம ஊராட்சிகளை இராசிபுரம் நகராட்சி 6 ஒன்றிணைத்து மொத்த மக்கள்தொகை66144 மற்றும் மொத்த பரப்பளவு 28.988 சதுரமீ.கி.. கொண்ட இராசிபுரம் தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்த மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>:

இராசிபுரம் நகராட்சியினை சுற்றியுள்ள மேற்கண்ட கிராம உள்ளாட்சிகளை இராசிபுரம் 6 நகராட்சியுடன் ஒன்றிணைத்து மொத்த மக்கள்தொகை66144 மற்றும் மொத்த பரப்பளவு 28.988 சதுரமீ அமைவதாலும்.கி., 1998ம் வருட உள்ளாட்சி அமைப்புகள்சட்டம்-அத்தியாயம் ,II, பிரிவு )3bன்படி ( முதல ் நிலை நகராட்சியில் இருந்துதேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்த கருத்துரு அரசிற்கு , .சமர்ப்பிக்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்

( 2677/24/எப்1)

**தீர்மானம் எண். 616**

ஒப்புதல் வழங்கப்பட்டது.

( 11 ) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 1 முதல் 27 வரையுள்ள பகுதிகளிலுள்ள ஆழ்துளைக்கிணறு மற்றும் திறந்தவெளிக் கிணற்றிலிருந்து அன்றாட தேவைக்கு உப்பு தண்ணீர் வழங்கும் குழாய்களில் ஏற்படும் கசிவுகள் மற்றும் குடிநீர் பகிர்மானக் குழாய்களில் ஏற்படும் குழாய் உடைப்புகள் மற்றும் அடைப்புகளை சரி செய்யும் பணிகளை மேற்கொள்ள உத்தேச செலவினத் தொகை ரூ. 5.00 லட்சம் என்பதால் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அ) மன்றம் அங்கீகரிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத் தொகை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

( 2065/24/இ2)

**தீர்மானம் எண். 617**

அனுமதிக்கப்படுகிறது.

( 12 ) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 27 திரௌபதியம்மன் கோவில் மற்றும் வார்டு எண். 22 பாஸ்யகாரலு தெரு, வார்டு எண். 19 கலைவாணி நகர், வார்டு எண். 7 மாரப்பன் தோட்டம், வார்டு எண். 1 போலீஸ் லைன் தெரு, வார்டு எண். 11 வி.நகர் ரோடு எண் 9, 10, ஆகிய தெருக்களுக்கு உப்புநீர் வசதி நீட்டிப்பு மற்றும் வார்டு எண். 20 காட்டூர் ரோடு 6” inch சூலிஸ் வால்வு ஆகியப் பணிகள் செய்ய ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ. 3,75,000/– என்பதால் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அ) மன்றம் அங்கீகரிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத் தொகை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(2066/24/இ2)

**தீர்மானம் எண். 618**

அங்கீகரிக்கப்படுகிறது.

( 13 ) இராசிபுரம் நகராட்சியில் பள்ளி மேம்பாட்டு மானியம் (School Improvement Grant) 2024-25 பள்ளிக் கல்வித் துறையிலிருந்து பெறப்பட்ட பணிகள் செய்து தருவதற்கு நகராட்சி நிருவாக இயக்குநர் ந.க.எண். 13011/2024 நாள் 23.05.2024–இல் அறிவுறுத்தப்பட்டது. அதற்கிணங்க பாரதிதாசன் சாலை நகராட்சி நடுநிலைப்பள்ளியில் ஏற்கனவே உள்ள பழுதடைந்த மோசமான கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தி ஒரு வகுப்பறை, சமையற்கூடம், ஹைக்டெக் லேப் மற்றும் பள்ளியின் நடைபாதையில் சிமெண்ட் சாலை (Construction of One class room, Dining hall in ground floor, Hi tech lab in first floor, Providing CC road for passage at Municipal Middle school in Bharathithasan school) அமைக்கும் பணிக்கு ரூ. 48,00,000/– இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நிருவாக அனுமதி வரப்பெற்று 14.08.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி

கோரப்பட்டு குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு முருகன், ஒப்பந்ததார் அவர்களுக்கு பணியாணை வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் பதிவு செய்யலாம்.

**(1568/24/இ1)**

**தீர்மானம் எண். 619**

பதிவு செய்யப்பட்டது.

**( 14 )** இராசிபுரம் நகராட்சியில் பள்ளி மேம்பாட்டு மானியம் (School Improvement Grant) **2024-25** பள்ளிக் கல்வித் துறையிலிருந்து பெறப்பட்ட பணிகள் செய்து தருவதற்கு நகராட்சி நிருவாக இயக்குநர் ந.க.எண். **13011/2024** நாள் **23.05.2024–**இல் அறிவுறுத்தப்பட்டது. அதற்கிணங்க வி.நகர் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் ஏற்கனவே பழுதடைந்துள்ள ஓட்டுக்கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தி தரைதளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய கட்டிடம் மற்றும் கழிப்பிடம் (Construction of G+1 block Consist of 2 class rooms and toilet at V.Nagar Municipal Middle school) அமைக்கும் பணிக்கு ரூ. **45,25,000/–** இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நிருவாக அனுமதி வரப்பெற்று **14.08.2024** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த M/S. ஹரி கன்ஸ்ட்ரக்ஷன் அவர்களுக்கு பணியாணை வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் பதிவு செய்யலாம்.

**(1568/24/இ1)**

**தீர்மானம் எண். 620**

பதிவு செய்யப்பட்டது.

**( 15 )** இராசிபுரம் நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் **2024-25** திட்டத்தின் கீழ் வார்டு எண். **3** கேசவன் லேவுட் பகுதியில் பூங்கா மற்றும் விளையாட்டு மைதானம் (Providing Park and Play field at Kesavan Layout in Rasipuram Municipality) அமைக்கும் பணிக்கு ரூ. **34,00,000/–** இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள முழு மானிய நிதியாக நிருவாக அனுமதி வரப்பெற்று **20.08.2024** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த M/S. முருகன் கன்ஸ்ட்ரக்ஷன் அவர்களுக்கு பணியாணை வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் பதிவு செய்யலாம்.

**(1746/24/இ1)**

**தீர்மானம் எண். 621**

பதிவு செய்யப்பட்டது.

**( 16 )** இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். **1** முதல் **13** வரையுள்ள பகுதிகளிலுள்ள ஆழ்துளைக் கிணற்றிலுள்ள மின்மோட்டார்கள் மற்றும் திறந்தவெளிக் கிணறுகளிலுள்ள

மின்மோட்டார்கள் அடிக்கடி பழுதடைவதால் பொதுமக்கள் நலன் கருதி மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்ய வேண்டியுள்ளது. எனவே மேற்படி பணிகள் மேற்கொள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 5.00/– இலட்சம் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அ) மன்றம் அங்கீகரிக்கலாம்

ஆ) மேற்கண்ட செலவினத் தொகை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(2467/23/இ1)**

**தீர்மானம் எண். 622**

அங்கீகரிக்கப்பட்டது.

**( 17 )** இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். **14** முதல் **27** வரையுள்ள பகுதிகளிலுள்ள ஆழ்துளைக் கிணற்றிலுள்ள மின்மோட்டார்கள் மற்றும் திறந்தவெளிக் கிணறுகளிலுள்ள மின்மோட்டார்கள் அடிக்கடி பழுதடைவதால் பொதுமக்கள் நலன் கருதி மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்ய வேண்டியுள்ளது. எனவே மேற்படி பணிகள் மேற்கொள்ள ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ. **5.00/–** இலட்சம் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அ) மன்றம் அங்கீகரிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத் தொகை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(2467/23/இ1)**

**தீர்மானம் எண். 623**

அங்கீகரிக்கப்பட்டது.

**( 18 )** இராசிபுரம் நகராட்சியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின்கீழ் **2023–24–**இல் ரூ. **20.00** இலட்சம் மதிப்பீட்டில் பணி செய்ய **18.05.2023–**இல் பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு ஆச்சி ரெஸ்டாரண்ட் என்பவரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று **05.06.2023** அன்று பணியாணை வழங்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து ஆகஸ்ட் மாதம் **25.08.2023** முதல் தற்போது வரை பணி செய்து வருகிறார். தற்போது இவர் போதிய பணியாளர்கள் இல்லை என்பதால் உரிய நேரத்தில் காலை உணவுத் திட்டத்தில் உணவு அளிக்க இயலாது என்று **20.06.2024–**இல் நகராட்சிக்கு கடிதம் அளித்துள்ளார். மேலும் இத்திட்டத்தில் தொடர்ந்து உணவளிக்க இயலவில்லை என்றும் இப்பணியிலிருந்து விலகிக்கொள்வதாகவும் வேண்டி கடிதம் வழங்கியுள்ளார். இவரின் பணியாணை இரத்து செய்து புதிய ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அ) மன்றம் அங்கீகரிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத் தொகை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(1191/23/இ1)**

**தீர்மானம் எண். 624**

அங்கீகரிக்கப்பட்டது.

( 19 ) இராசிபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே வார்டு – B, பிளாக்– 10, நகர புல எண். 15/4, 15/7–இல் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க மனுதாரர் **திருமதி பி. வத்சலாதேவி, கதவு எண். 6/72, பழனியாண்டவர் புதூர், கோயம்புத்தூர்** என்பவருக்கு 1.74 ஏக்கர் பரப்புள்ள இடத்தில் 32 குடியிருப்பு மனைகள் உள்ளடக்கிய மனைப்பிரிவிற்கு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் மனைப்பிரிவு வரைபட எண். SWP/ DTCP/ NAMAKKAL/LAYOUT NO. 271/2022 நாள் 20.12.2022–இல் ந.க.எண். NKL/ 238AU4D1/ 4125/2022/TCP-இல் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி, மனைப்பிரிவிற்கு அடிப்படை வசதிகளான தார் சாலைகள், குடிநீர் குழாய் வசதி, மழைநீர் கால்வாய் ஆகிய வசதிகள் அமைக்கப்பட்டுள்ளது. பொறியியல் பிரிவின் 08.10.2024–ஆம் தேதிய குறிப்பின்படி இப்பகுதியில் பாதாள சாக்கடை திட்டம் இல்லை, தற்போது தேவையில்லை என தெரிவித்துள்ளார்கள். மேற்கண்ட மனைப்பிரிவில் மின்வசதி மற்றும் தெருவிளக்கு புதியதாக அமைக்கும் பணிக்கு மின்வாரியத்திற்கு செலுத்த கட்டணம் ரூ. 1,50,000/– ம் ஆக்ஸிஸ் வங்கி அயோத்திப்பட்டணம் வங்கி வரைவோலை எண். 636211012, நாள் 08.10.2024 இந்நகராட்சியில் சமர்ப்பித்துள்ளதாக பொறியியல் பிரிவு குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், மனுதாரர் மேற்கண்ட வங்கி வரைவோலையை இந்நகராட்சியில் செலுத்தி சலான் எண். 053/01/2/24–25/0005652, நாள் 14.10.2024–இல் ரசீது சமர்ப்பித்துள்ளார். மனுதாரர் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய இதரக் கட்டணம் ரூ. 71,842/– சலான் எண். 053/ 01/2/24–25/0005535 நாள் 14.10.2024–இல் செலுத்தி ரசீது சமர்ப்பித்துள்ளார். மேற்படி மனைப்பிரிவில் பொது ஒதுக்கீடுகள் மற்றும் மனைப்பிரிவு சாலைகள் தானபத்திர ஆவண எண். 7060/2022 நாள் 03.11.2022–இன்படி சாலைகளின் பரப்பளவு 2128.79 சதுர மீட்டர் இடமும், மற்றும் பொது உபயோகத்திற்காக 25.71 சதுர மீட்டர் இடமும் ஆணையாளர், இராசிபுரம் நகராட்சி பெயரில் தானமாக பதிவு செய்து, நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்கள் மூலம் நகராட்சியில் சமர்ப்பித்துள்ளதை பின்னேற்பு ஒப்புதல் பெறுவதற்கும், மேற்கண்ட மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அரசாணை (நிலை) எண். 181 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள் 09.12.2020 மற்றும் நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண். 12843/ 22/ டிபி2 நாள் 20.10.2022 சுற்றறிக்கையின்படியும், மேற்கண்ட தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள மனைப்பிரிவிலுள்ள சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை தானப்பத்திரத்தின்படி தானமாக ஒப்படைக்கப்பட்ட சொத்துக்களை இந்நகராட்சி பராமரிப்பிற்கு ஏற்க, தானமாக பத்திரப்பதிவு செய்ததை விதிகளுக்குட்பட்டு இம்மன்றம் பின்னேற்பு ஒப்புதல் வழங்கலாம் மற்றும் மேற்கண்ட மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கலாம்.

**(1686/24/எப்1)**

**தீர்மானம் எண். 625**

ஒப்புதல் வழங்கப்பட்டது.

( 20 ) இராசிபுரம் நகராட்சியில் வளர்ந்து வரும் மக்கள் தொகை மற்றும் பெருகி வரும் போக்குவரத்து நெரிசல் ஆகியவற்றை கருத்தில் கொண்டு தற்பொழுதுள்ள பேருந்து நிலையம் போதுமானதாக இல்லை. எனவே புதிய பேருந்து நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டது. இதற்கு இராசிபுரம் வட்டம், அணைப்பாளையம் கிராமத்தில் உள்ள இராசிபுரம் நகராட்சி ஆணையாளருக்கு சொந்தமான புல எண். 116, 117, 118, 41–இல் உள்ள 7.03 ஏக்கர் இடத்தில் இராசிபுரம் நகராட்சிக்கு புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்கு அரசுக்கு திட்ட மதிப்பீடு தயார் செய்து முன் மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. இதற்கான திட்ட மதிப்பீடு தயார் செய்து தொழில் நுட்ப அனுமதி பெறவும் வரைபடங்கள் மற்றும் கட்டிட வடிவமைப்பு பெறவும் கலந்தாலோசகர்

மூலம் மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் மதிப்பீட்டில் 1.25%-ற்குள் மேற்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத் தொகை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவசரம் கருதி மன்றத் தலைவர் முன் அனுமதியுடன் பணியின் கலந்தாலோகர் ஸ்மார்ட் பில்டர்ஸ் தர்மபுரி அவர்களுக்கு ஒப்படைத்து திட்ட மதிப்பீடு தயார் செய்ததை மன்றம் அனுமதிக்கலாம்.

(1890/24/இ1)

**தீர்மானம் எண். 626**

அங்கீகரிக்கப்பட்டது.

(21) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 19 காட்டூரில் உள்ள நகராட்சி நடுநிலைப் பள்ளியின் அங்கன்வாடி மையத்தின் மேற்கூரை பழுது சரி செய்தல் மற்றும் கான்கிரீட் பாதை அமைத்தல் பணிக்கு நகர் மன்றத் தீர்மானம் எண். 563 நாள் 06.03.2024-இல் அனுமதி வழங்கியுள்ளதன் பேரில் ரூ. 2,50,000/- என்ற மதிப்பீட்டிற்கு 19.08.2024-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1 | M/S. ஹரி கன்ஸ்ட்க்ஷன், ஒப்பந்ததாரர், இராசிபுரம் | -0.11% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/S. முருகன் கன்ஸ்ட்க்ஷன் ஒப்பந்ததாரர், இராசிபுரம் | 0.58% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி பணிக்கு மதிப்பீட்டைவிடக் குறைவான -0.11% ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S. ஹரி கன்ஸ்ட்க்ஷன், ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

(2010/24/இ1)

**தீர்மானம் எண். 627**

அங்கீகரிக்கப்பட்டது.

(22) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 7 வி.நகர் ரோடு எண். 1, 6–ஆவது கிராஸ், அருணாச்சலம் காடு பகுதியில் உள்ள ஆழ்துளைக் கிணறு அடி பம்பு போடப்பட்டு 6 ஆண்டுகளாக பழுதாகி உள்ளதால் அதனை அகற்றி சிறு மின்சிசை பம்பு பொருத்தி சின்டெக்ஸ் டேங் அமைத்து தண்ணீர் வசதி செய்தல் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ. 3.80 இலட்சம் செலவினம் என்பதால் மேற்படி செலவினத் தொகை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக் கோரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அ) மன்றம் அங்கீகரிக்கலாம்.
ஆ) மேற்கண்ட செலவினத் தொகை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(2709/24/இ2)

**தீர்மானம் எண். 628**

அங்கீகரிக்கப்பட்டது.

(23) இராசிபுரம் நகராட்சி புதியதாக கட்டப்பட்ட தினசரி அங்காடியில் உள்ள 57 கடைகளுக்கு புதிய மின் இணைப்பு பெற கடைகளில் இருந்து மின்வாரிய கம்பத்திற்கு கேபிள் போடவும் மற்றும் ஐந்து இடத்தில் வைக்கப்பட்ட பேனல் போர்டுகளை கடை எண். 22–இல் ஒரே இடத்தில் பொருத்தவும் மதிப்பீடு தொகை ரூ. 4.90 இலட்சம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அ) மன்றம் அங்கீகரிக்கலாம்

ஆ) மேற்கண்ட செலவினத் தொகை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(0908/23/இ1)

**தீர்மானம் எண். 629**

அங்கீகரிக்கப்பட்டது.

(24) இராசிபுரம் நகராட்சியில் வளர்ந்து வரும் மக்கள் தொகை மற்றும் பெருகி வரும் போக்குவரத்து நெரிசல் ஆகியவற்றை கருத்தில் கொண்டு தற்பொழுதுள்ள பேருந்து நிலையம் நகரின் மையப்பகுதியில் மிகவும் நெருக்கடியான இடத்தில் உள்ளதால் புதிய பேருந்து நிலையம் நகரின் வெளிப்பகுதியில் அமைக்க உத்தேசிக்கப்பட்டது. இதற்கு இராசிபுரம் வட்டம், அணைப்பாளையம் கிராமத்தில் உள்ள இராசிபுரம் நகராட்சி ஆணையாளருக்கு சொந்தமான புல எண். 116, 117, 118, 41–இல் உள்ள 7.03 ஏக்கர் இடத்தில் இராசிபுரம் நகராட்சிக்கு புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்கு அரசுக்கு திட்ட மதிப்பீடு தயார் செய்து முன் மொழிவு அனுப்பப்பட்டது. இதற்கு கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2024-25 திட்டத்தின்கீழ் இராசிபுரம் நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் கட்டுதல் ( Construction of New bus stand in Survey No. 116, 117, 118 & 41) பணிக்கு ரூ. 1058.00 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்கண்ட அட்டவணையில் உள்ள விவரங்கள் பணிகள் மேற்கொள்ள 09.09.2024 அன்று நடைபெற்ற மாநில அளவிலான உயர்மட்ட குழு கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | TUFIDCO நிறுவனத்தின் மூலம் அனுமதிக்கப் பட்ட மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்ட பங்கு தொகை (ரூ. இலட்சத்தில்) | நகராட்சி பங்கு தொகை (ரூ. இலட்சத்தில் ) |
|---|---|---|---|---|
| 1 | இராசிபுரம் நகராட்சியில் சர்வே எண். 116, 117, 118 & 41-இல் புதிய பேருந்து நிலையம் கட்டுதல் | ரூ.1058.00 | ரூ. 529.00 | ரூ. 529.00 |

மேலும் நகராட்சி பங்குத் தொகை ரூ.529.00 இலட்சத்திற்கு நகராட்சி நிதியிலிருந்து பணிகள் மேற்கொள்ளவும் உரிய தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. நகராட்சி பங்குத் தொகையை பேருந்து நிலைய கடைகள் முன் ஏலம் நடத்தியும், பேருந்து நுழைவு கட்டணம், இரு சக்கர வாகனம் நிறுத்தம், ஆட்டோ நிறுத்தம் ஆகிய வருவாயில் இருந்தும் ஈடு செய்யலாம்.

(1890/24/இ1)

**தீர்மானம் எண். 630**

நகராட்சி பொது நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

**( 25 )** இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 3, 8, 11, 15, 16, 19, 21, 23, 25, 27 ஆகிய வார்டுகளில் உப்புநீர் குழாய் நீட்டிப்பு செய்தல் பணிக்கு நகர் மன்றத் தீர்மானம் எண். 563 நாள் 06.03.2024-இல் அனுமதி வழங்கியுள்ளதன் பேரில் ரூ. 5,00,000/- மதிப்பீட்டிற்கு 19.08.2024-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1 | திரு N. செல்லப்பன், ஒப்பந்ததாரர், இராசிபுரம் | -0.09% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திருமதி R. ஷாகிதா, ஒப்பந்ததாரர், இராசிபுரம் | 1.25% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்படி பணிக்கு மதிப்பீட்டைவிட அதிகமான -0.09 % ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு N.செல்லப்பன், ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

(0743/24/இ2)

**தீர்மானம் எண். 631**

அங்கீகரிக்கப்படுகிறது.

**( 26 )** இராசிபுரம் நகராட்சி பொறியியல் பிரிவில் குடிநீர் விநியோக பராமரிப்பு வெளிக்கொணர்வு முகமை மூலம் பணியாளர்கள் பணியமர்த்துதல் தொடர்பாக அளவுகோல்கள் நிர்ணயம் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண் 21787/2021/EA2, நாள்.02.10.2021ல் உத்தரவிடப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் 37.50 இலட்சம் கொள்ளவு கொண்ட 5 OHT உள்ளது. குடிநீர் விநியோகம் செய்ய நிரந்தர பணியாளர் ஒரு நபர் மட்டும் உள்ள நிலையில் மேற்கண்டசுற்றறிக்கையின்படி 14 நபர்கள் தேவைப்படுகிறது, எனவே அதற்கிணங்க வெளிக்கொணர்வு முகமை மூலம் 13 பணியாளர்கள் பணியமர்த்திக்கொள்ள பணிக்கு நகர் மன்ற தீர்மான எண் 11 , நாள்.31.03.2022 அன்று தீர்மானம் அனுமதிக்கப்பட்டு 31.03.2022 அன்று ராசி ஆண்கள் சுய உதவிக்குழுவிற்கு பணியாணை வழங்கப்பட்டது. தற்போது ராசி ஆண்கள் சுய உதவிக்குழுவின் கடிதத்தில் ஊதியம் உயர்த்தி தர வேண்டி 07.10.2024ஆம் தேதியன்று விண்ணப்பம் அளித்துள்ளார். அவ்விண்ணப்பத்தில் தற்போது பெறப்படும் ஒருநாள் ஊதியம் ரூ.450 னை மாற்றி மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் மாவட்டம் அவர்களின் வர்த்தமானி அறிவிப்பின்படி நகராட்சி வெளிக்கொணர்வு பணியாளர்களுக்கு ஒரு நபருக்கு ரூ.640 வீதம் ஊதியம் வழங்க கேட்டுக்கொள்ளப்பட்டது. எனவே அவ்வறிவிப்பின்படி வெளிக்கொணர்வு பணியாளர்கள் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி வரும்வரை கீழ்கண்ட விவரப்படி பணி அமர்த்திக்கொள்ள அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண் | ஒரு நாள் ஊதியம் | நபர்களின் எண்ணிக்கை ஒரு நாள் ஊதியம் | 13 நபர்களுக்கு மாத ஊதியம் |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 1 | ரூ.640/- | ரூ.640/-x13= ரூ.9600/- | ரூ. 9600 /- x 30= 249600/- |
| 2 | | EPF 13.61% | ரூ. 33,960/- |
| 3 | | ESI 4.75% | ரூ. 11,856/- |

மேற்கண்ட விவரப்படி 13 நபர்களுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி வரும்வரை தற்காலிகமாக பணி மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்கண்ட செலவினத் தொகை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ) நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி அனுமதி பெறலாம்.

**(3817/21/இ2)**

**தீர்மானம் எண். 632**

அனுமதிக்கப்பட்டது.

**(27)** இராசிபுரம் நகராட்சியில் புதிய LED விளக்குள் (120 வாட்ஸ்) 77 எண்ணிக்கையில் அமைக்கும் பணிக்கு C.S.R. Initiative மூலமாகி பெடரல் வங்கி நிதி ஒதுக்கீடு செய்து கடிதம் அளித்துள்ளது (C.S.R./MPF/SO-135/2024-25-இல்) இதன்படி LED தெரு விளக்குகள் பழைய பேருந்து நிலைய ஏ.வி.ஆர். ரவுண்டானா முதல் ஆஞ்சநேயர் கோவில் வரை சுமார் 200 மீ. நீளத்திற்கு இருபுறமும், சேந்தமங்கலம் பிரிவு ரோடு முதல் புதிய பேருந்து நிலையம் வரை 1800 மீ. இருபுறமும் 30 மீ. இடைவெளியில் புதிய பேருந்து நிலையத்தின் சுற்றுப்புறம் மற்றும் வளாகத்தின் உட்புறம் அமைக்கப்படும் தெரு விளக்கு கம்பத்தின் உயரம் 9.00 மீ. பணிகளை செய்து முடிக்க ரூ. 6211800/—ஐ நகராட்சிக்கு அளிப்பதாக கடிதம் அளித்துள்ளது. P & B Enterprises, Erode அவர்கள் மூலமாக இப்பணியினை மேற்கொள்ளவதாகவும் தெரிவிக்கப்பட்டு நமக்கு நாமே திட்டத்தின்கீழ் முழு பங்களிப்பு தொகையினை வழங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது, நகராட்சி நிருவாக இயக்குநர் அவர்களின் அனுமதி பெற்று இப்பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(2627/24/இ1)**

**தீர்மானம் எண். 633**

அனுமதிக்கப்பட்டது.

**(28)** இராசிபுரம் நகராட்சியில் UIDSSMT 2018-19 திட்டத்தின் கீழ் 8500 பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்க திரு V.Pஅழகையன் என்பவருக்கு 01.03.2019 தேதியன்று பணி உத்திரவு வழங்கப்பட்டது. மேலும் இப்பணிக்கான ஒப்பந்த பணி காலம்18 மாதங்கள் என ஒப்பந்தம் செய்யப்பட்டது ஒப்பந்த காலம் 30.04.2020 இல் முடிவடைகிறது, இருப்பினும் இதுவரை 2908 இணைப்புகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது மீதம் உள்ள .5592 இணைப்புகள் வழங்க 12.07.2019, 19,08,2019, 09,09,2019, 01,10,2019, 17,10,2019, 25,11,2019, 12,03,2020, 30,12,2020, 21,06,2021, 08,07,2021 ,16.12.2022, 30.12.2022 23.07.2024, 06.08.2024 ஆகிய தேதிகளில் அறிவிப்பு வழங்கியும் பணியில்

எவ்வித முன்னேற்றமும் இல்லை மற்றும் 23.08.2024 ஆம் தேதியன்று இறுதி அறிவிப்பில் அந்நிறுவனத்தின் பணியாணையினை ரத்து செய்யவும்,கருப்பு பட்டியலில் கொண்டு செல்லவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்திருந்தும் இதுநாள்வரை பணிகள் முடிக்கப்படவில்லை. மேற்கொண்டு ஒப்பந்த பணியில் ஒப்பந்ததாரர் பணிகள் தொடர்ந்து செய்வதற்கு முன்வராததால் கூடுதல் ஒப்பந்த விதி 36.2-ல் C-ன்படி ரத்து செய்யவும் மறு ஒபந்தபுள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) ஒப்பந்ததாரரின் ஒப்பந்தத்தை ரத்து செய்து மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி மேற்கொள்வதுடன், ஏற்படும் இழப்பிற்கு ஒப்பந்ததாரர் மீதம் வழங்க வேண்டியதை பட்டியலில் பிடித்தம் செய்யவும் ஒப்பந்ததாரரின் முன் வைப்புத் தொகையிலிருந்து பறிமுதல் செய்து ஈடு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(804/18/இ2)

**தீர்மானம் எண். 634**

அங்கீகரிக்கப்பட்டது.

**(29)** இராசிபுரம் நகராட்சியில் UIDSSMT 2018-19 திட்டத்தின் கீழ் 6500 பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்க ஹரி கன்ஸ்ட்ரக்சன் என்பவருக்கு 30.10.2018 தேதியன்று பணி உத்திரவு வழங்கப்பட்டது மேலும் இப்பணிக்கான ஒப்பந்த பணி காலம்.18 மாதங்கள் என ஒப்பந்தம் செய்யப்பட்டது .இப்பணிக்கு 30.04.2020 உடன் ஒப்பந்தகாலம் முடிவடைகிறது .ஆனால் இதுவரை 3654 இணைப்புகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது மீதம் உள்ள .2846 இணைப்புகள் வழங்க 12.07.2019, 19,08,2019, 09,09,2019, 01,10,2019, 17,10,2019, 25,11,2019, 12,03,2020, 30,12,2020, 21,06,2021, 08,07,2021 ,16.12.2022, 30.12.2022 23.07.2024, 06.08.2024, ஆகிய தேதிகளில் அறிவிப்பு வழங்கியும் பணியில் எவ்வித முன்னேற்றமும் இல்லை மற்றும் 23.08.2024 ஆம் தேதியன்று இறுதி அறிவிப்பில் அந்நிறுவனத்தின் பணியாணையினை ரத்து செய்யவும்,கருப்பு பட்டியலில் கொண்டு செல்லவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்திருந்தும் இதுநாள்வரை பணிகள் முடிக்கப்படவில்லை. மேற்கொண்டு இப்பணியினை செய்ய ஒப்பந்ததாரர் முன்வராததால் ஒப்பந்தப்பணியினை கூடுதல் ஒப்பந்த விதி 36.2-ல் C-ன்படி ரத்து செய்யவும் மறுஒபந்தபுள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) ஒப்பந்ததாரரின் ஒப்பந்தத்தை ரத்து செய்து மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி மேற்கொள்வதுடன், ஏற்படும் இழப்பிற்கு ஒப்பந்ததாரர் மீதம் வழங்க வேண்டியதை பட்டியலில் பிடித்தம் செய்யவும் ஒப்பந்ததாரரின் முன் வைப்புத் தொகையிலிருந்து பறிமுதல் செய்து ஈடு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(804/18/இ2)

**தீர்மானம் எண். 635**

அனுமதிக்கப்பட்டது.

(30) இராசிபுரம் நகராட்சியில் UIDSSMT 2018-19 திட்டத்தின் கீழ் 6200 குடிநீர் இணைப்புகள் வழங்க திரு V.Pஅழகையன் என்பவருக்கு 01.03.2019 தேதியன்று பணி உத்திரவு வழங்கப்பட்டது மேலும் இப்பணிக்கான ஒப்பந்த பணி காலம்.18 மாதங்கள் என ஒப்பந்தம் செய்யப்பட்டது .30.04.2020 உடன் இப்பணி முடிவடைகிறது .ஆனால் இதுவரை 1650 இணைப்புகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது மீதம் உள்ள .4550 இணைப்புகள் வழங்க 24.12.2019, 16.12.2022, 30.12.2022 மற்றும் **23.07.02024, 06.08.2024** ஆகிய தேதிகளில் அறிவிப்பு வழங்கியும் பணியில் எவ்வித முன்னேற்றமும் இல்லை மற்றும் 23.08.2024 ஆம் தேதியன்று இறுதி அறிவிப்பில் அந்நிறுவனத்தின் பணியானையினை ரத்து செய்யவும்,கருப்பு பட்டியலில் கொண்டு செல்லவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்திருந்தும் இதுநாள்வரை பணிகள் முடிக்கப்படவில்லை. மேற்கொண்டு இப்பணியை ஒப்பந்ததாரர் செய்ய முன்வராததால் ஒப்பந்த பணியினை கூடுதல் ஒப்பந்த விதி 36.2-ல் C-ன்படி ரத்து செய்ய மறு ஒபந்தபுள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) ஒப்பந்ததாரரின் ஒப்பந்தத்தை ரத்து செய்து மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி மேற்கொள்வதுடன், ஏற்படும் இழப்பிற்கு ஒப்பந்ததாரர் மீதம் வழங்க வேண்டியதை பட்டியலில் பிடித்தம் செய்யவும் ஒப்பந்ததாரரின் முன் வைப்புத் தொகையிலிருந்து பறிமுதல் செய்து ஈடு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(218/18/இ2)

**தீர்மானம் எண். 636**

அனுமதிக்கப்பட்டது.

ஓம்/— முனைவர் இரா. கவிதா சங்கர்,
நகர் மன்றத் தலைவர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்
இராசிபுரம் நகராட்சி

(10) இராசிபுரம் நகராட்சி 22.05.1998-இல் முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு ,27 வார்டுகளாக ,8.158 சதுர மீட்டர் பரப்பளவில் ,2011-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 50244 மக்கள் தொகை உள்ளடக்கி தற்போது செயல்பட்டு வருகிறது. தற்போது உத்தேச மக்கள் தொகை 69000 ஆகும் .தற்போது இந்நகராட்சியை ஒட்டினாற்போல் அமைந்துள்ள கிராம ஊராட்சிகள் தேசிய நெடுஞ்சாலை, நான்கு வழி சாலையை ஒட்டி அமைந்துள்ளதால், நன்கு வளர்ச்சியடைந்து வருவதாலும் மற்றும் அணைப்பாளையம் பகுதியில் இந்த நகராட்சி புதிய பேருந்து நிலையம் அமைக்க இருப்பதால் கீழ்கண்ட கிராம ஊராட்சிகளை

7. அணைப்பாளையம்
8. சந்திரசேகரபுரம்
9. கவுண்டம்பாளையம்
10. முத்துக்காளிப்பட்டி
11. கோனேரிப்பட்டி
12. முருங்கப்பட்டி

இந்நகராட்சியுடன் இணைத்தால், இந்நகரம் வளர்ச்சி அடையும். மேலும் இராசிபுரம் நகரில் பட்டு சேலை விற்பனை முனையமாக செயல்படுவதாலும்நெய் உற்பத்தி செய்யும் மையமாக இருப்பதாலும் , கு செல்லும் முக்கிய நகரமாக இந்நகராட்சி மற்றும் முக்கிய சுற்றுலாத்தலமாக கொல்லிமலைக் இந்நகரில் .பிற்காலத்தில் இது ஒரு மாநகராட்சியாக தரம் உயரக்கூடிய சூழ்நிலையும் உள்ளது .உள்ளது வியாபாரத்தைமுன்னிட்டு சுமார் 15000 பேர் இந்நகராட்சிக்கு வந்து செல்கின்றனர்.

இந்நகராட்சி முதல் நிலை நகராட்சியாக கொண்டு ஆண்டு வருமானம் 1269.78 இலட்சம் உள்ளது.

கீழ்கண்ட கிராம ஊராட்சிகளை இராசிபுரம் முதல் நிலை நகராட்சியுடன் இணைப்பதன் மூலமாக இராசிபுரம் தேர்வு நிலையாக தரம் உயர்த்த வழிவகை உள்ளது.

| வ. எண் | கிராம ஊராட்சி பெயர் | மக்கள் தொகை | பரப்பளவு (ச. கி. மீ) |
|---|---|---|---|
| 7. | அணைப்பாளையம் | 1200 | 3.415 |

| | | | |
|---|---|---|---|
| 8. | சந்திரசேகரபுரம் | 4000 | 1.676 |
| 9. | கவுண்டம்பாளையம் | 2500 | 6.350 |
| 10. | முத்துக்காளிப்பட்டி | 4500 | 5.009 |
| 11. | கோனேரிப்பட்டி | 2500 | 2.061 |
| 12. | முருங்கப்பட்டி | 1200 | 2.319 |
| **மொத்தம்** | | **15900** | **20.830** |

மேற்கண்ட கிராம ஊராட்சிகளை இராசிபுரம் முதல் நிலை நகராட்சியுடன் இணைப்பதால் மக்களுக்கு அதிக பயனுள்ள பெரு நகரமாக மேம்பாடு அடையும்.

| **வ. எண்** | **கிராம ஊராட்சி பெயர்** | **மக்கள் தொகை 2011** | **பரப்பளவு (ச. கி. மீ.)** |
|---|---|---|---|
| 1. | இராசிபுரம் நகராட்சி | 50244 | 8.158 |
| 2. | 6 கிராம ஊராட்சிகள் | 15900 | 20.830 |
| **மொத்தம்** | | **66144** | **28.988** |

மேற்கண்டவாறு இராசிபுரம் முதல் நிலை நகராட்சியின் எல்லையை விரிவாக்கம் செய்து தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டால் அரசு மானியங்கள் அதிக அளவில் ஒதுக்கீடு செய்ய வாய்ப்பு உள்ளதுஇந்நகராட்சியுடன் மேற்கண்ட கிராம ஊராட்சிகளை இணைப்பதால் . பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டுஅப்பகுதி பொது மக்கள் , .வாழ்வாதாரம் மேம்படும்

இதன் அடிப்படையில் மேற்கண்ட கிராம ஊராட்சிகளை இராசிபுரம் நகராட்சியுடன் 6 மக்கள்தொகை ஒன்றிணைத்து மொத்த66144 மற்றும் மொத்த பரப்பளவு 28.988 சதுரமீ.கி.. கொண்ட இராசிபுரம் தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்த மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :</u>

இராசிபுரம் நகராட்சியினை சுற்றியுள்ள மேற்கண்ட கிராம உள்ளாட்சிகளை இராசிபுரம் 6 நகராட்சியுடன் ஒன்றிணைத்து மொத்த மக்கள்தொகை66144 மற்றும் மொத்த பரப்பளவு 28.988 சதுரமீ அமைவதாலும்.கி., 1998ம் வருட உள்ளாட்சி அமைப்புகள்சட்டம்-அத்தியாயம் ,II, பிரிவு )3bன்படி ( முதல ் நிலை நகராட்சியில் இருந்துநகராட்சியாக தரம் உயர்த்த கருத்துரு அரசிற்கு தேர்வு நிலை , .சமர்ப்பிக்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்

**( 2677/24/எப்1)**

**தீர்மானம் எண். 616**

ஒப்புதல் வழங்கப்பட்டது.

ஒம்/– முனைவர் இரா. கவிதா சங்கர்,
நகர் மன்றத் தலைவர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்
இராசிபுரம் நகராட்சி

இராசிபுரம் நகராட்சியின் 23.10.2024–ஆம் தேதியன்று நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கையின் தீர்மானம் எண். 630–இன் உண்மை நகல்.

---

இராசிபுரம் நகராட்சியில் வளர்ந்து வரும் மக்கள் தொகை மற்றும் பெருகி வரும் போக்குவரத்து நெரிசல் ஆகியவற்றை கருத்தில் கொண்டு தற்பொழுதுள்ள பேருந்து நிலையம் நகரின் மையப்பகுதியில் மிகவும் நெருக்கடியான இடத்தில் உள்ளதால் புதிய பேருந்து நிலையம் நகரின் வெளிப்பகுதியில் அமைக்க உத்தேசிக்கப்பட்டது. இதற்கு இராசிபுரம் வட்டம், அணைப்பாளையம் கிராமத்தில் உள்ள இராசிபுரம் நகராட்சி ஆணையாளருக்கு சொந்தமான புல எண். 116, 117, 118, 41–இல் உள்ள 7.03 ஏக்கர் இடத்தில் இராசிபுரம் நகராட்சிக்கு புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்கு அரசுக்கு திட்ட மதிப்பீடு தயார் செய்து முன் மொழிவு அனுப்பப்பட்டது. இதற்கு கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2024-25 திட்டத்தின்கீழ் இராசிபுரம் நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் கட்டுதல் ( Construction of New bus stand in Survey No. 116, 117, 118 & 41) பணிக்கு ரூ. 1058.00 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்கண்ட அட்டவணையில் உள்ள விவரங்கள் பணிகள் மேற்கொள்ள 09.09.2024 அன்று நடைபெற்ற மாநில அளவிலான உயர்மட்ட குழு கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | TUFIDCO நிறுவனத்தின் மூலம் அனுமதிக்கப் பட்ட மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்ட பங்கு தொகை (ரூ. இலட்சத்தில்) | நகராட்சி பங்கு தொகை (ரூ. இலட்சத்தில் ) |
|---|---|---|---|---|
| 1 | இராசிபுரம் நகராட்சியில் சர்வே எண். 116, 117, 118 & 41-இல் புதிய பேருந்து நிலையம் கட்டுதல் | ரூ.1058.00 | ரூ. 529.00 | ரூ. 529.00 |

மேலும் நகராட்சி பங்குத் தொகை ரூ.529.00 இலட்சத்திற்கு நகராட்சி நிதியிலிருந்து பணிகள் மேற்கொள்ளவும் உரிய தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. நகராட்சி பங்குத் தொகையை பேருந்து நிலைய கடைகள் முன் ஏலம் நடத்தியும், பேருந்து நுழைவு கட்டணம், இரு சக்கர வாகனம் நிறுத்தம், ஆட்டோ நிறுத்தம் ஆகிய வருவாயில் இருந்தும் ஈடு செய்யலாம்.

**தீர்மானம் எண். 630**

நகராட்சி பொது நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

ஒம்/– முனைவர் இரா. கவிதா சங்கர்,
நகர் மன்றத் தலைவர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்
இராசிபுரம் நகராட்சி

**இராசிபுரம் நகராட்சியின் 23.10.2024–ஆம் தேதியன்று நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கையின் தீர்மானம் எண். 612–இன் உண்மை நகல்.**

---

இராசிபுரம் நகராட்சிக்கு திரு பாஸ்கர், த/பெ. திரு ராமசாமி ரெட்டியார், கதவு எண் 50, R.R.பேர்லேண்ட்ஸ், கொண்டலாம்பட்டி, சேலம் அவர்கள் இராசிபுரம் வட்டம், அணைப்பாளையம் கிராமத்தில் உள்ள பாஸ்கர் என்பவருக்கு சொந்தமான புல எண்.116, 117, 118, 41–இல் உள்ள 7.03 ஏக்கர் நிலத்தினை இராசிபுரம் நகராட்சி ஆணையாளர் பெயருக்கு 05.07.2024 தேதியன்று தானமாக வழங்கியுள்ளார் (ஆவண எண். 4221/2024) தற்போது மேற்கண்ட இடம் ஆணையாளர் பெயருக்கு தானமாக பெறப்பட்டதனை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் பதிவு செய்யலாம்

**தீர்மானம் எண். 612**

பதிவு செய்யப்பட்டது.

ஒம்/– முனைவர் இரா. கவிதா சங்கர்,
நகர் மன்றத் தலைவர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்
இராசிபுரம் நகராட்சி